## எள் விலை அதிகரிக்க வாய்ப்பில்லை

உலக அளவில் எள் உற்பத்தி, நுகர்வு மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவில் எண்ணெய் பிழிதல் (SEAI) அமைப்பின்படி, 2015-16 ஆம் ஆண்டில் எள் 19.81 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 8.87 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேற்கு வங்காளம், மத்திய பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள், நாட்டின் மொத்த எள் உற்பத்தியில் 70 சதவிகிதம் முக்கிய பங்களிக்கிறது. உத்திர பிரதேசம், ஆந்திர பிரதேசம், மஹாராஷ்ரா, தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஒடிசா ஆகியவை எள் உற்பத்தி செய்யும் மற்ற மாநிலங்களாகும்.

வேளாண் அமைச்சகத்தின்படி, 2014-15 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில், எள் 0.66 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 0.36 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்து, 596 கிலோ/எக்டர் மகசூல் கிடைத்துள்ளது. தமிழ்நாட்டில், ஈரோடு, விழுப்புரம், தஞ்சாவூர், கரூர், கடலூர், தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகியவை எள் உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும்.

ஜப்பான், ஹாலந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜெர்மனி, துருக்கி, நெதர்லாந்து, ஹாங்காங், இஸ்ரேல், ஐக்கிய நாடுகள் மற்றும் ஐக்கிய அரபு நாடுகள் ஆகியவை முக்கிய எள் இறக்குமதி நாடுகளாகும். இந்திய எண்ணெய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு கழகத்தின்படி 2015-16 ஆம் ஆண்டு 3.28 இலட்சம் டன்கள் எள் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் 2014-15 ஆம் ஆண்டு 3.75 இலட்சம் டன்கள் எள் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. இந்திய எள் விதை அறிக்கையின் படி, எள் விதையின் தற்போதைய இருப்பு நிலை தோராயமாக 60,000 டன்களாக கணிக்கப்பட்டுள்ளது.

வருடத்தின் எள் உற்பத்தியில் 65 சதவிகிதம் எண்ணெய் தயாரிப்பதற்கும், 35 சதவிகிதம் உணவு தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. எள், டிசம்பர்-ஜனவரி மற்றும் ஜூலை-ஆகஸ்டு ஆகிய மாதங்களில், வருடத்திற்கு இரண்டு முறை பயிரிடப்படுகிறது. பழுப்பு மற்றும் கருப்பு எள் இரகங்கள் எண்ணெய் தயாரிப்பதற்கும் வெள்ளை எள் இரகங்கள் மிட்டாய் தயாரிப்பதற்கும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 16 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள சிவகிரி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய எள் விலையை, சந்தை ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் அறுவடையின் போது (செப்டம்பர் 2016-ல்) தரமான கருப்பு எள்ளின் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 62-64 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், ஆடிப்பட்ட விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.


**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி - 0422-2431405

**<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்
எண்ணெய் வித்துக்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-2450812